# பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

## பத்தாம் வகுப்பு / இயல் - 1

**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைக்கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சச்சிதானந்தன் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தமிழழகனார் ஈ) பாரதிதாசன்

2. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ) தென்மொழி ஆ) இரட்டுற மொழிதல் இ) கனிச்சாறு ஈ) மகபுகுவஞ்சி

3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகை நயம் காண்க:-

அ) முத்தமிழ் - முச்சங்கம் ஆ) மெத்த - நித்தமும் இ) அணைகிடந்தே இணைகிடந்த ஈ) துய்ப்பதால் - கண்டதால்

4. முத்தமிழ் - பிரித்து எழுதுக:-

அ) மூ+தமிழ்+ ஆ) மூன்று +தமிழ் இ) முத்+தமிழ் ஈ) முத்து +தமிழ்

5. **ஆழி** - என்பதன் பொருள் யாது?

அ) நெருப்பு ஆ) நீர் இ) கடல் ஈ) சினம்

6. தமிழ் - எதனோடு ஒப்பிடப்படுகிறது?

அ) சங்கு ஆ) கடல் இ) கப்பல் ஈ) அறிவு

7. மெத்த வணிகலன் என்பது கடலோடு ஒப்பிடும் போது ------------

அ) காப்பியம் ஆ) காவியம் இ) படகு ஈ) வணிகக் கப்பல்